**காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்**

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 28ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் தேதி, புதன்கிழமை**

**குறள்:401**

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

**குறள் விளக்கம்:**

அறிவு நிரம்புவதற்குக் காரணமான நூல்களைக் கல்லாமல், ஒருவன் அவையின் கண் ஒரு பொருளைப் பற்றிக் கூறுதல் என்பது சூதாடும் களத்தை வகுத்துக் கொள்ளாமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது.

**பொன்மொழி**

நமது அறிவு என்பது எறும்பு என்றால் வாழ்க்கையும் இந்த உலகமும் யானையைப் போன்றது.

**பழமொழி**

*Bend the twig, bend the tree*

ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

**பொதுஅறிவு வினா விடை**

- சென்னைப் பல்கலைக் கழகம் யார் காலத்தில் தொடங்கப்பட்டது . டல்ஹெளசி பிரபு
- தமிழ்நாட்டில் தொலைக்காட்சி தொடங்கப்பட்ட ஆண்டு - 1975

**இரண்டொழுக்க உறுதிமொழி**

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

*Abbreviations*

D.D. - Demand Draft - கேட்பு வரைவோலை

DA - Dearness Allowance - அகவிலைப்படி

sowndeeswarischool.com

## இன்றைய செய்திகள்

- ❖ உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் முதல் பறக்கும் கார் குஜராத்தில் உருவாக உள்ளது.
- ❖ கொரோனா வைரஸ் எதிரொலியாக வாரணாசியில் உள்ள கோவிலில் கடவுள் உருவத்திற்கு முகக்கவசம் அணிவிக்கப்பட்டு உள்ளது.
- ❖ இந்தியாவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 56 ஆக இன்று உயர்வடைந்து உள்ளது.
- ❖ கொரோனாவுக்காக பொதுமக்கள் மாஸ்க் போட வேண்டும் அவசியமில்லை என்று தமிழக சுகாதார துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.
- ❖ கொரோனா வைரஸ் பாதிப்பால் சீனாவில் மேலும் 17 பேர் உயிரிழந்துள்ளனர்
- ❖ நடிகர் ரஜினிகாந்த் மீது தொடரப்பட்ட பெரியார் பற்றிய சர்ச்சை பேச்சு தொடர்புடைய வழக்கு இன்று தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளது.
- ❖ மாநில திட்டக்குழு துணை தலைவராக எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சிகளின்போது அமைச்சராக பணியாற்றிய பொன்னையன் நியமிக்கப்பட்டு உள்ளார்.

Sowndeeswari Middle School
Bodinayakanur - 625 513
Learn more in our School